# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2026 சுறவம் (சன-பிப்-,95) விலை உருபா 1-50 (இதழ் எண்: 174)

# உலகத் தமிழ் மாநாடும் உண்ணா நோன்புப் போராட்டமும்!

## தமிழுக்கோ, தமிழினத்திற்கோ இந்த அரசு ஒன்றுமே செய்ய முற்படாது!

## தமிழின் பெயரால் கூட்டுக் கொள்ளை அடிப்பதே இவர்களின் நோக்கம்!

### பாவலரேறு அவர்களின் வெள்ளை அறிக்கை!

• அண்மையில் தஞ்சையில் நடந்த எட்டாவது 'உலகத் தமிழ் மாநாடு' செயலலிதா அரசின் விளம்பரத்திற்கும் ஆரவாரத்திற்கும் ஏறத்தாழ 70 கோடி உருபா கொள்ளையடிப்புக்காகவுமே திட்டமிட்டு நடத்தப் பெற்றது என்றால் அது மிகையாகாது. குறிப்பாக தமிழக முதலமைச்சர் செயலலிதா உலக அளவில் தம் பெயரை விளம்பரப் படுத்திக் கொள்வதற்காகவே இம் மாநாட்டை நடத்தியுள்ளார் என்பது அங்கு நடைபெற்ற திரைப்படப்பாணி கூத்தடிப்புகளால் தெள்ளத் தெளிவாகியுள்ளது.

• உலகத் தமிழ் மாநாடுகளை நடத்துகின்ற பொறுப்பு பெயருக்குத்தான் '*உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினது*' என்று சொல்லப் பெற்றதே தவிர, இம் மாநாட்டை நடத்தியது முழுக்க முழுக்க அ.தி.மு.க. அரசும் அதன் தலைவராக உள்ள செயலலிதாவும் அவரின் பரிவார அடிவருடி அமைச்சர்களையுமே சார்ந்ததாக இருந்தது என்பதில் எள்ளத்துணையும் கற்பனையோ பொய்யோ புனைந்துரையோ இல்லை. இந் நிலையில் இதற்கு மூல காரணமாக உள்ள 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமும்' அதன் பொறுப்பாளர்களும் வெறும் பொம்மைகளாகவே ஆக்கப்பட்டிருந்தனர் என்பதும் மிகையான கூற்றன்று. இப்பொறுப்பாளர்கள் அனைவரும் கையற்ற நிலையிலேயே இருந்து. வெறுமனே வேடிக்கைப் பார்வையாளர்களாகவே மதிக்கப்பெற்று மனம் வருந்தித் திரும்பிப் போயினர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இம் மாநாடு ஒரு திருவிழாவாகவே நடந்து

முடிந்துள்ளது. இத் திருவிழா நிகழ்ச்சிகளை எதிர்காலத்தில் நினைவு கூர்கிறபொழுது, இம் மாநாட்டையொட்டி நடந்த இரண்டு துயர நிகழ்ச்சிகளையும் உலகில் உள்ள தமிழர்களும், வேற்றினத் தமிழறிஞர்களும் கட்டாயம் தவறாமல் நினைத்து வருந்தவே செய்வார்கள் என்பதில் ஐயமில்லை. இந் நிகழ்ச்சிகள் பற்றி நாம் திறனாய்வு செய்வதற்கு முன் இம் மாநாட்டுத் தொடர்பாகச் செலவழிக்கப் பெற்ற—இப்பொழுது வெளியிடப் பெற்றுள்ள கணக்குப்படி—ஏறத்தாழ எழுபது கோடி உருபா பொதுமக்களின் கண்ணீரில் கரைக்கப்பட்ட— வீணாக்கப்பட்ட—தொகையாக எண்ணி நெஞ்சம் குமுற வேண்டியுள்ளது. எனவே அதுபற்றிச் சில விளக்கங்களைத் தந்துவிட்டு மேலே செல்வோம்.

உலகத் தமிழ் மாநாட்டுக்கெல்லாம் அடிப்படை தில்லியில் 1964-ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்துலகக் கீழைத் தேச அறிஞர் மாநாடே ஆகும். அங்கு சேவியர் தனிநாயகம் அடிகள் தலைமையில் கூடிய தமிழறிஞர்கள் **'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்'** என்னும் பெயரில் ஓர் அமைப்பைத் தொடங்கினார்கள். இம் மன்றமே உலகத் தமிழ் மாநாடுகளை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தமிழர்கள் வாழும் பல்வேறு நாடுகளில தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும், அம் மாநாடுகளில் தமிழ் மொழியைப் பல துறைகளிலும் முறைகளிலும் வளர்ந்தோங்கச் செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்தது. அத் தீர்மானத்தின்படி, நடைபெறும் அம் மாநாடுகளில் உலகெங்கணும் உள்ள தமிழறிஞர்கள், தமிழை வளர்த்தெடுக்கும் கருத்துரைகளை ஆராய்ச்சிக் கட்டுரைகளின் வழி தமிழ் மக்களுக்கும் தமிழ்நாட்டு அரசுக்கும் பிற தமிழ் வளர்க்கும் நிறுவனங்களுக்கும் அறிவிக்க வேண்டும் என்றும், அவற்றை அவை செயலுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் உறுதி கொண்டது.

அத் தீர்மானத்தின்படி, முதலாம் உலகத் தமிழ் மாநாடு 1966-இல் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்றது. அம் மாநாட்டிற்கு மலேசிய அரசு பலவகையிலும் துணை நின்றது. அதில் தமிழகத்தின் அப்பொழுதைய முதலமைச்சர் திரு.பக்தவத்சலம் கலந்து கொண்டார். அதில் அவர் 'தென்கிழக்கு ஆசிய ஆய்வியல் துறை' ஒன்றை மதுரைப் பல்கலைக் கழகத்தில் தொடங்கப்போவதாக அறிவித்தார். அந்த முயற்சி இன்னும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அந்த மாநாட்டின் விளைவாக வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறை தொடங்க வேண்டும் என்பதற்கான முயற்சிகளும் நடைபெற்றன. ஆனால், தொடர்ந்து வந்த தமிழக அரசுகளின் போதிய ஆதரவின்மையால் அந்த முயற்சிகளும் ஈடேறவில்லை.

அடுத்தபடி, இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, 1968-சனவரியில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலும், அறிஞர் திரு.அண்ணா அவர்கள் முதலமைச்சராகவும் இருந்த காலத்தில் சென்னையில் நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கான மொத்த செலவே ஏறத்தாழ ஒன்றறைக் கோடி தான். அந்த மாநாட்டின் முடிவில் ஓரளவு மீதமான தொகையில் சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சி மையங்கள் தொடங்கப் பெற்றன. அம் மாநாட்டில், நடுவணரசு வெளியிடவிருந்த மாநாட்டு நினைவு அஞ்சல் தலையில் தமிழ் எழுத்துகளைப் பொறிக்காத காரணத்தால் அண்ணா அதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனர். அத்துடன் அக்கால் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும், தமிழ் வளர்ச்சித் துறையும், தொல்பொருள் ஆய்வுத்துறையும் நிறுவப் பெற்றன. அதேபொழுது, அறிஞர் அண்ணா அவர்கள் அந்த மாநாட்டில் தெரிவிக்கப் பெற்ற கருத்துகளின் அடிப்படையில்தான், ஏற்கனவே காமராசர் முதலமைச்சராக இருந்த பொழுது 1956-இல் நிறைவேற்றப் பெற்ற ஆட்சி மொழிச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக 1968-இல் சட்டமன்றத்தில், 'அச்சட்டம் அனைத்துத் துறைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்' என்ற ஒரு சிறப்புத் தீர்மானத்தையும் கொண்டு அரசு இயந்திரத்தைத் தமிழ் வளர்க்கும் செயலில் முடுக்கி விட்டார். ஆனால், தமிழுக்கு மாறான அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மையால், அச்சட்டம் அண்ணாவின் ஆட்சிக் காலத்திற்கும் மறைவிற்கும் பின்னர் சிறிது காலம் நொண்டியடித்துக் கொண்டிருந்து விட்டுச் செயலிழந்து நின்று விட்டது.

பிறகு, மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு 1970-இல் கலைஞர் திரு.கருணாநிதி முதலமைச்சராக விருந்த காலததில் பாரீசில் நடைபெற்றது. அவர் காலத்தில் பூம்புகார், திருவள்ளுவர் கோட்டம் முதலிய புறநிலைச் செயல்கள் நடைபெற்றனவே தவிர தமிழ் மொழி ஆக்கத்திற்கென தனியான சிறப்பு நிகழ்ச்சிகள் ஏதும் நடைமுறைப் படுத்தப் பெறவில்லை.

அடுத்த நான்காம் உலகத் தமிழ் மாநாடு 1974-இல் இலங்கையின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அம் மாநாட்டின் பொழுதுதான் சிங்கள அரசால் சில விரும்பத்தகாத விளைவுகள் தமிழர்களுக்காக நிகழ்த்தப் பெற்றன. உலகம் அப்பொழுதுதான் சிங்கள அரசால் அங்குள்ள தமிழர்கள் அடக்கியொடுக்கப்படும் நிலையை அறிந்துகொள்ள வேண்டி வந்தது. அம்மா நாட்டின் பொழுது தமிழக முதலமைச்சராகவிருந்த கலைஞர் திரு.கருணாநிதி, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரை இயக்குநராகக் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் துறையை ஏற்-

படுத்தித் தமிழுக்கு ஒரு தூய அகர முதலி உருவா-கும் முயற்சியைச் செயலுக்குக் கொண்டு வந்தார்.

பிறகு, 1981-ஆம் ஆண்டு, திரு. ம. கோ. இராமச்சந்திரன் (எம்.ஜி.ஆர்.) முதலமைச்சராக விருந்த பொழுது, மதுரையில், 5-ஆவது உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டினர். அதன் பின்னர்தான் தமிழுக்கென்று ஒரு தனிப் பல்கலைக் கழகமான, 'தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை உருவாக்கிய-துடன், கலைஞர் காலத்தில் அடிக்கல் நாட்டப் பெற்ற வள்ளுவர் கோட்டத்தையும் தமிழ் மக்கள் நலனுக்கென்று ம.கோ.இரா. தொடங்கி வைத்தார்.

அதன் பின்னர் 6-ஆம் உலகத் தமிழ் மாநாடு, மீண்டும் 1987-இல் மலேசியாவில், கோலாலம்பூரில் நடைபெற்றது. ஆனால், அதுவும் வழக்கம் போலவே ஆரவாரத்துடன் கூடிக் கலைந்தது. அம் மாநாடு நடப்பதற்கு முன்னர், மதுரை மாநாட்டிற்கு முன், இம் மாநாடுகள் நடைபெறுவதற்கே அடிகோலிய அறிஞர் தனிநாயக அடிகள் மறைந்து போனர்.

இங்கு ஒன்றைச் சொல்லியாக வேண்டும். பெரும்பாலும ஒவ்வொரு மாநாடும் கூட்டப் பெறும் முன், அதற்கு முன்னர் நடைபெற்ற மாநாடுகளில் படிககப் பெற்ற கட்டுரைகளை யெல்லாம் அச்சியற்றி வெளிக் கொணர்தல் இம் மாநாட்டின் செயற்குழுவினரது கடமையாக இருந்தது. இந்த நடைமுறை ஐந்து மாநாடுகள் வரை முறையாக நடந்து வந்தது. ஆனால், ஆரு-வது மாநாட்டில் படிக்கப் பெற்ற கட்டுரைகள் இன்று வரை அச்சிட்டு வழங்கப் பெறவில்லை அது மட்டுமன்று; 1989-இல் மொரீசியசில் நடைபெற்ற 7-ஆவது மாநாட்டிலும் படிக்கப் பெற்ற கட்டுரை-களும் கூட இன்றுவரை அச்சேறவில்லை இஃது எதைக் காட்டுகிறதெனில். 5-ஆவது மாநாட்டிற்குப் பின்னர் நடைபெற்ற 6-ஆவது 7-ஆவது உலகத் தமிழ் மாநாடுகள் ஏதோ ஒரு கடமைக்காக, ஒரு வழக்கத்திற்காக, ஆரவார முறையில், தமிழக அரசின் விளம்பர வேடிக்கைக் காக—மட்டும் கூட்டப் பெற்ற மாநாடுகளாகவே போயின என்பதைத்தான் வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது. அதுவுமன்றி இம் மாநாடுகளால் தமிழுக்கோ, தமிழர்களுக்கோ ஒரு பயனும் விளைந்து விடவில்லை. அவ்வாறு பயனை எண்ணியிருந்தால், 1956-இலேயே, கொண்டுவரப் பெற்ற ஆட்சி மொழிச் சட்டம், மீண்டும் 1968-இல் அறிஞர் அண்ணா அவர்களால் தமிழகச் சட்ட மன்றத்திலேயே அதைச் செயல்படுத்துவதற் குரிய ஒரு தீர்மானம் போடப் பெற்றும், இன்று வரை, அஃதாவது, 8-ஆவது மாநாடு நடைபெறும் வரையிலும் நடந்த பின்னரும் கூட, செயல் படுத்-தாமலும், தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு வராமலும், அறமன்ற மொழியாக ஆக்காமலும், தமிழ் படித்தும், தமிழில் படித்தும் பட்டம் பெற்ற-வர்க்கே தமிழ் நாட்டில் அரசுப் பணியில் முன்-னுரிமை வழங்காமலும், வெறும் வாய் முழக்கமாக, விளம்பரத்திற்காக—ஒப்போலைக்காக—தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக—'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று கூறிக் கொண்டு இருந்திருக்க மாட்டார்கள். ஆனால், மக்களுக்கு இந்தச் சூழ்ச்சி தெரியாமல் இருப்பதால் தமிழ்ப் புறக்கணிப்பு ஆட்சியாகவே தமிழக ஆட்சி இன்று வரை நடை-பெற்று வந்துள்ளது, வருகிறது என்க.

இன்னொரு செய்தியையும் பொதுமக்கள் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்! தமிழக அரசு நிலையில்தான் தமிழ் ஆட்சி மொழியில்லை; பயிற்சி மொழியில்லை, அறமன்ற மொழியில்லை என்ப-தில்லை. தமிழை உலக அளவில் முன்னேற்றச் செய்வதற்காகவே, தமிழுக்காகவே நடத்துவதாகக் கூறப்பெறும் உலகத் தமிழ் மாநாட்டின் செயற் பாடுகளிலேயே தமிழ் அதற்குரிய முகாமை இடத்தைப் பெறவில்லை. அதிலேயே தமிழுக்குரிய பெருமை கிடைக்கவில்லை.

உலகத் தமிழ் மாநாட்டின் அலுவலகப் பணி-கள், மடல் தொடர்புகள், கோப்புகள், நடைமுறை-கள் அனைத்தும் தமிழில் நடைபெறுவதில்லை; ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இஃது எத்துணைப் பெரிய வெட்கக் கேடான செய்தி. இஃதன்றி, மாநாடுகளில் தமிழை மேம்படுத்துவதற்-காகப் படிக்கப்பெறும் ஆராய்ச்சிக் கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள் பெரும்பாலும் ஆங்கி-லத்திலேயே உள்ளன என்பது பெரிதும் வருந்துவ தற்கும் எள்ளுவதற்கும் உரிய செய்தியாக உள்ளது. இம் முறையற்ற நடைமுறை ஒன்றே தமிழ்மொழி செயலுக்கு உதவாத மொழி என்று தமிழ்ப்பகைவர்கள் கூறுவதை மெய்ப்பிப்பதாக இல்லையா? பின் எவ்வாறு தமிழை வளர்ப்பது? மேம்படுத்துவது? எதற்காக இம் மாநாடுகள்? எண்ணிப் பாருங்கள்.

இனி, இன்னும் வருந்துவதற்குரியது என்ன வென்றால், உலகத் தமிழ் மாநாடு என்று பெயர் வைத்துக் கொண்டு, அங்கு நடைபெறும் கருத்-தரங்கில் பெரும்பாலான அறிஞர்கள் வெறும் தன்-மதிப்புக்காக ஆங்கிலத்திலேயே உரை நிகழ்த்து-வதுதான். இனி மூன்றும் நான்காம் மாநாடுகளி லேயே பொறியியல், மருத்துவம், அறிவியல் துறைகளில் நூல்கள் எழுதப் பெற வேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்று, அம்முயற்சிக்காகத் தொகையும் காலமும் கூட அறிவிக்கப்பட்டன. ஆனால் ஏறத்தாழ பதினைந்து மருத்துவ நூல்களும் பதின்மூன்று பொறியியல் நூல்களும் எழுதத் பெற்று, இரண்டிலுமாக இதுவரை ஆறு நூல்களே வெளியிடப் பெற்றுள்ளன.

Scanned with CamScanner

இவ்வாறு நோக்கம், திட்டமிடுதல், செயல்படுதல் ஆகிய எதிலுமே ஒரு வரையறையின்றி, மாநாடுகளை அரசு விளம்பரத்துக்காகவும், அதன் பெயரால் அதன் ஒதுக்கீட்டுத் தொகையைக் கொள்ளையடிப்பதற்காகவும் தேர்த் திருவிழா நடவடிக்கைகள் போல் ஆரவாரமாகவும் ஆடம்பரமாகவுமே நடத்துவது பெரிதும் வருந்தத்தக்கதாகவும், கவலைக்குரியதாகவும், கண்டிப்பதற்குரியதாகவும்,வெறுப்புக்குரியதாகவுமே உள்ளது என்பதைத் தமிழுலகம் உணர்ந்து கொள்ளுமாக!

இவையத்தனை நிலைகளிலும் 'குதிரை குப்புறக் கீழே தள்ளியதுமன்றிக் குழியையும் பறித்தது' என்று கூறும்படி, அண்மையில் தஞ்சையில் நடந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாடோ, தன் நோக்கத்திலும், திட்டமிடலிலும், கொள்ளையடிப்பிலும், ஆடம்பர ஆரவாரத் தனங்களிலும், இம்மாநாட்டை முன்னின்று நடத்திய செயலலிதாவின் தன் விளம்பரத்திலும்,முன்னைய மாநாடுகளைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு அழிம்புகளுக்குப் பெயர் பொறித்துக் கொண்டதாக அமைந்திருந்தது. அடடா! எத்துணை இழிவுகள்! எத்துணை அழிவுகள்!! நம் அருந்தமிழ் மொழிக்கு இத்துணைப் பெரிய சாப்பள்ளமா? புதைகுழியா? வஞ்சகமா? பச்சை இரண்டகமா? செயலலிதாவின் திரைப்படப் பாணியில் தட்டிகளையும் அட்டைகளையும் தடுக்குகளையும் கொண்டு கட்டப்பெற்ற காட்சி சுவடிப்புகள் தஞ்சாவூரையே அலங்கோல அல்லோல கல்லோலமாக நாறடித்து விட்டன. எங்குப் பார்த்தாலும் அந்த அம்மாவின் ஊதுகாமாலை முகரைகளே சுவரொட்டிகளாகத் தஞ்சைச் சுவர்களில் அப்பளங்களாக அப்பிக் கிடந்தன. இவற்றை விட அந்த அம்மாக்கு வேறு இழிவோ தாழ்ச்சியோ வேண்டியதிலை. இவற்றுடன் வெட்டுருவங்கள் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவை! பொய்யாகவும் புளுகாகவும் புனைந்துரையாகவும் எழுதப்பெற்ற புகழுரைகளோ அந்த அம்மாவின் இயல்பான ஓரிரு திறமைகளையும் இழிவுபடுத்துவனவாக எங்கெங்கும் பல்லிளித்தன. மொத்தத்தில் கழிவறைகள் கூட அந்த அம்மாவின் வரவேற்பறைகளாகக் காட்சியளித்தன.

1968-ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா காலத்தில் நடைபெற்ற 2-ஆம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு உருபா ஒன்றரைக் கோடி செலவழிக்கப் பெற்றது. 1981-ஆம் ஆண்டில் ம.கோ.இரா. (எம்.ஜி.ஆர்) காலத்தில் நடந்த 5-ஆம் மாநாட்டிற்கு உருபா மூன்று கோடி செலவழிக்கப் பெற்றது. செயலலிதா காலத்தில் நடந்த இவ் வெட்டாவது மாநாட்டிற்கு உருபா எழுபது கோடி ஆகிறதென்று தோராயமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இன்னும் இறுதியில் கணக்கு வழக்குகளெல்லாம் பார்த்து உருபா நூறு கோடி ஆகிறதென்று சொன்னாலும் வியப்படைவதற்கில்லை. அத்தனையும் மக்கள் பணம்; குடிமக்கள் வரிப்பணம்! செயலலிதா கொள்ளையடித்து அமுக்கி வைத்த பணம் அன்று! அரசுப் பணம்! என்னே கொடுமை! என்னே ஊதாரித்தனம்! என்னே திறமையான திட்டமிட்ட கொள்ளையடிப்பு! 'களவென்னும் காரறிவாண்மை.' என்பது இதுதான். எங்கே போய் முறையிடுவது? எதில் போய் முட்டிக் கொள்வது?

எதற்குமே தில்லிக்குக் காவடி தூக்கும் தமிழினத்தையே ஆளவந்தார்க்குக் காட்டிக் கொடுத்து அடிவருடிப் பதவி நலம் காணும் ம.பொ.சிவஞானம் என்னும், காலத்திற்கேற்பத் தாளமிடும் கருத்தாளர், 1981-இல் மதுரையில் ம.கோ.இரா. மூன்று கோடிச் செலவில் நடத்திய மாநாட்டையே கீழ்வருமாறு குறைத்து மதிப்பிட்டார்.

"தமிழின் பெயரால் மாநாடு நடத்தி மகிழ்வதை நான் வெறுக்கவில்லை; விரும்புகிறேன். ஆனால், இதுவரை நடந்துள்ள உலகத் தமிழ் மாநாடுகளின் விளைவாகத் தமிழ்மொழி அடைந்த வளர்ச்சி என்ன? அறிவியல் துறையிலே, சட்டத் துறையிலே, ஆட்சித் துறையிலே தமிழ் மொழி வளர்ச்சியடைந்ததுண்டா? அத்தகைய வளர்ச்சி பற்றி உலகத் தமிழ் மாநாடு சிந்தித்துப் பார்த்ததுண்டா" — இப்படி ஒரு கேள்வியை அன்றைய ம.பொ.சி. கேட்டார். ஆனால் நூறு கோடி செலவு காட்டி வெறும் ஆடம்பர ஆரவாரத்தன் விளம்பர வேடிக்கை விளையாட்டுகளிலேயே குளிர் காய்ந்து நடத்திக் காட்டிய இவ் வெட்டாம் உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றி ஏன் இதுவரை வாயே திறக்கவில்லை? இது, அந்த ம.பொ.சி.க்கும் செயலலிதாவுக்குமே வெளிச்சம்! இது நிற்க. இனி, நடந்து முடிந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுத் தொடர்பாக சில செய்திகளைப் பார்க்கலாம்.

முதற்கண் இம் மாநாட்டை 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்' நடத்துவதாக அறிவிப்பிலோ விளம்பரங்களிலோ அழைப்பிதழ்களிலோ, மாநாட்டில் நடத்தப் பெற்ற பொது மக்கள் அரங்கிலோ, அல்லது ஆராய்ச்சியாளர்களின் கருத்தரங்காக நடந்த தமிழ்ப் பல்கலைக் கழக அரங்கிலோ அல்லது வேறு எங்குமோ, எந்த வடிவத்திலோ தெரியப் படுத்தவே இல்லை. இதற்கு மாறாகவும் தவறாகவும் செயலலிதா தலைமையில் உள்ள அ.தி.மு.க. அரசே நடத்துவது போல ஒரு பொய்யான போலித்தனமான செய்தியே எல்லாச் சுவரொட்டிகளிலும், சுவரெழுத்துகளிலும், செய்தித்தாள்களில் பலமுறை வெளிவந்த முழுப்பக்க விளம்பரங்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

அந்த வகையில், ஊர் முழுவதும் நாடு முழுவதும், எங்கெங்கும், எவ்விடத்தும் ஏறத்தாழ பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட செயலலிதாவின் பெரிய பெரிய முழு அளவு வெட்டுருவங்கள், அந்த

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

# இன்றைய செயலலிதா ஆட்சி தமிழுக்கும் தமிழினத்துக்கும் பகையானது!

(வே.ஆனைமுத்து அவர்களின் 'சிந்தனையாளன்' கட்டுரையின் சென்ற இதழ்த் தொடர்ச்சி.)

இந்த செயலலிதா, "சமூக நீதி காத்த வீராங்கனை" என்று கொள்ளப்பட்டால், இதைச் சொல்லுகிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் ஆதரிக்கிறவர்களுக்கும் எதில் சுயமரியாதை இருக்கிறது? எப்படி இனமானம் இருக்கிறது? எப்படி மொழி உரிமை உணர்வு இருக்கிறது? எந்த அளவு சமூக நீதி உணர்வு இருக்கிறது?

இதை எண்பிக்கிற—செயலலிதாவின் கல்வித் துறையிலான தீய செயல்பாடுகள் என்னென்ன?

1. இனிமேல் துவக்கப்பள்ளிகள், உயர் துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் துவங்க யாரேனும் அரசிடம் அனுமதி கேட்டால்—அந்த அனுமதியும் அங்கீகாரமும் வழங்கப்படும். ஆனால் நிதி உதவி எதையும் அரசு தராது.

இதை ஏற்றுக் கொண்டு, 'நிதி உதவ கோர மாட்டோம்" என்று, 5 ரூபாய் முத்திரைத் தாளில் பத்திரம் எழுதி, அரசுக்குத் தரவேண்டும்.

அதன் பிறகு யார் வேண்டுமானாலும் எத்தகைய பள்ளியை வேண்டுமானாலும் துவங்கலாம் என்பது செயலலிதா அரசு வெளியிட்ட முதலாவது கல்வித் துறைச் செயல்பாடு—சமூக அநீதி நடவடிக்கை.

எட்டாம் வகுப்பு வரை இலவசக் கட்டாயக் கல்வி தர வேண்டியது அரசின் கடமை. ஆளவந்தோரை அதட்டிக் கேட்டு இந்த உரிமையைப் பெற—சமூக நீதியை நிலைநாட்டிட அல்லவா எல்லோரும் முன்வர வேண்டும்? அதற்கு மாறாக இந்தச் சமூக அநீதிச் செயலை மூடியா மறைப்பது?

2. உயர்நிலை—மேல்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர் தவிர்த்த மற்ற எல்லா ஆசிரியர்களும், எல்லா மணவர்களும் கிழமைதோறும் திங்கள், வெள்ளி இரண்டு நாள்களிலும் பள்ளியில் ஆங்கிலத்திலேயே பேசிக் கொள்ள வேண்டும்.

அப்படிப் பேசத் தவறிய மாணவன் ஒரு தடவைக்கு 10 காசு தண்டம் செலுத்த வேண்டும்; தவறிய ஒரு ஆசிரியர் 1 ரூபாய்த் தண்டம் கட்ட வேண்டும்; தவறிய ஒரு தலைமை ஆசிரியர் 10 ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழன் படிக்கிற பள்ளியில் இரண்டு நாள்கள் முழுவதும் பேசுவதே ஆங்கிலத்தில் என்றால்—இது தமிழனுக்கு அநீதி இல்லையா? தமிழுக்கு இழைக்கப்பட்ட அநீதி இல்லையா?

"பெரியாரே அப்பா அம்மா மனைவி மக்களிடம் ஆங்கிலத்தில் தான் பேச வேண்டும் என்று சொன்னார்" என்று கதைக்கிற கறுப்புச்சட்டை அன்பர்களுக்கு, இது புரிய வேண்டாமா? பெரியார் அப்படித்தான் உறுதியாகச் சொன்னார் என்றால். அவர் எப்படித் தமிழரின் தலைவர்? அவர் எல்லாம் தமிழில்—எங்கும் தமிழில் இருக்க வேண்டும் என்பதையே மொழிக் கொள்கையாகக் கொண்டவர்.

தமிழ் வளர்ச்சிக்குத் தடையான இந்த நடப்பைக் கொண்டுவந்த செயலலிதா சமூக அநீதி காக்கும் காவலரா? சமூக நீதி காத்த வீராங்கனையா?

மானமும் உரோசமும் ஒரு அவுன்சு இருந்தால் கூட, ஒரு தமிழன் செயலலிதாவை 'சமூக நீதி காத்த வீராங்கனை' என எப்படிக் கூறுவான்?

இது மட்டுமா?

1994 95-ஆம் நிதியாண்டுக்குத் தமிழக அரசின் வரவு செலவு 8,000 கோடி ரூபாய்.

இந்த எட்டாயிரம் கோடி ரூபாய் செலவு ஆவதில், புதிதாக ஒரு 500 பேர் சப்-இன்ஸ்பெக்டர் வேலை பெறுவார்கள்; நேரு வேலை தரும் திட்டம் மூலம் சில ஆயிரம் பேர் உடலுழைப்பு வேலை பெறுவர். வேறு எந்த வேலைக்கும் எவரும் அமர்த்தப்பட இதில் வழிவகை இல்லை.

3. ஓராசிரியர் பள்ளிகள், ஈராசிரியர் பள்ளிகள் சுமார் 10,000 உள்ளன;

ஓய்வு, சாவு மூலம் காலியான ஆசிரியர் இடங்கள் 10,000.

இந்த நிலையில் ஒரு நூறு ஆசிரியர்கள் கூடப் புதிதாக அமர்த்திட அரசு வகை செய்யவில்லை என்றால், கல்வி பாழாவதாகத் தானே பொருள்? அடிப்படைக் கல்விக்கு எதையுமே செய்ய விரும்பாத ஓர் அரசு, தமிழக மக்களைக்—குறிப்பாக அடித்தட்டு மக்களைப் பாழாக்குவதுதானே!

இது சமூகநீதியைக் காப்பதா? சமூகத்தில் அநீதியை வளர்த்தெடுத்துக் காப்பதா?

4. 1993 சூன் முடிய தமிழகத்தில் வேலை இல்லாத படித்தவர்கள், அரசு தரும் கணக்குப்படி, 24 இலட்சம் பேர்

10ஆம் வகுப்பு முதல் பட்ட மேற்படிப்பு, தொழில்நுட்பப் படிப்பு படித்தோர் இதில் அடங்குவர்.

இவர்களில் எத்தனைப் பேருக்கு, என்ன வேலை என்று வரவு செலவுத் திட்டத்தில உறுதிதராத தமிழக அரசு சமூக அநீதி அரசா? சமூக நீதி காக்கும் அரசா?

Scanned with CamScanner

"இவையெல்லாம் நாங்கள் நினைக்கிற சமூக நீதியில் அடக்கம் இல்லை. இட ஒதுக்கீடு கொள்கையில் தமிழக அரசு நடக்கிற விதம் , மட்டுமே. எங்களுக்கு சமூக நீதியின் அளவுகோல்". என்றால், அந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் கூட, செயலலிதா அரசு செய்த திருகுதாளம் பற்றித் தெரியவே வேண்டாமா?

5. மண்டல் பரிந்துரை 27% இட ஒதுக்கீட்டைப் பிற்படுத்தப்பட்டோருக்கு அளித்திருக்கிறது. இதையே மய்ய அரசு ஏற்றிருக்கிறது. இதிலும் வளர்ந்த பிரிவினரை நீக்குகிறது. இது தவறு.

"தமிழ்நாட்டில் உள்ளதுபோல் 50% தனி இட ஒதுக்கீடு மய்ய அரசிலும் பிற்படுத்தப்பட்டோருக்குத் தரவேண்டும்" என்பது செயலலிதா அரசின் ஒரு தீர்மானம். இது வரவேற்கத்தக்கது.

இத்துடன் அரசு நின்றிருந்து, இதற்கான முயற்சியிலேயே முழு மூச்சாக இறங்கியிருந்தால், அதில் வெற்றி கிட்டும்போது, செயலலிதா சமூக நீதி காத்த வீராங்கனை தான்.

**இட ஒதுக்கீடு—இரட்டை வேடம்?**

அடுத்து, தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு உள்ள 50% இட ஒதுக்கீடு, மொத்தம் உள்ள 69% இட ஒதுக்கீடு இவை காப்பாற்றப்பட, செயலலிதா அரசு முன்கூட்டியே ஒரு தீர்மானம் நிறைவேற்றி,மய்ய அரசைக் கேட்டுக் கொண்டது.

இதையே இன்னமும் திருத்தமாகவும் செம்மையாகவும் செய்திட வேண்டி தி.க வும், காங்கிரசும் அரசுக்குச் சில ஆலோசனைகளை வழங்கின.

அரசியல் சட்டம் விதிகள் 31 B. 31 C-இன் கீழ் மாநில அரசு எந்த ஒரு சட்டத்தையும் செய்து கொள்ளலாம். 69% இட ஒதுக்கீடு இங்கு அப்படியே நீடிக்க வேண்டும என்று தமிழக சட்டமும் செய்ய உரிமை உண்டு என்பதே அந்த ஆலோசனை. இது சரியானதே. இது நிறைவேற்றப்பட்ட பிறகு, குடி அரசுத் தலைவரின் அனுமதி கிடைக்க வேண்டும்.அப்படி அவர் அனுமதி தர இடம் இருக்கிறது.

இதன் பிறகு, நீதிமன்றத்துக்கு எவரும் போக முடியாதபடி செய்திட இந்தத் தமிழகச் சட்டம், ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டும். இதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் தரவேண்டும். இதுவும் நியாயமான எதிர்பார்ப்பேயாகும்.

இவ்வளவும் நடந்து விடுவதால்—இது வெல்வதால் நமக்குக் கிடைக்கும் நன்மை என்ன?

தமிழ்நாட்டுக் கல்வியிலும் வேலையிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இன்று உள்ள 50% இட ஒதுக்கீடு காப்பாற்றப்படும். அவ்வளவே.

ஆனால் பிற்படுத்தப்பட்டோருக்கு மய்ய அரசு வேலையில் 50% இடஒதுக்கீடு அல்லது விகிதாசார இட ஒதுக்கீடு வர இது எப்படி உதவும்? எப்போது உதவும்? இது ஒரு போதும் உதவாது.

இது புரிவதில் என்ன துன்பம் இருக்கிறது—அறியாமை தவிர?

இப்படியெல்லாம் இரண்டு மூன்று கட்டங்களில் தன்னிச்சையாகவும், பிறகு தி க.,காங்கிரஸ், தி.மு.க. மற்றும் எல்லாக் கட்சிகளின் ஆதரவுடனும் பிற்படுத்தபட்டோர் இட ஒதுக்கீட்டைக் காப்பாற்றிட முயன்ற 'சமூக நீதி காக்கும் செயலலிதா'—இவற்றுடன் நின்றாரா? இல்லையே:

"பிற்படுத்தப்பட்டோருக்கு 50% இட ஒதுக்கீடு' தாழ்த்தப்பட்டோருக்கு 18% இட ஒதுக்கீடு; பழங்குடியினருக்கு 1% இட ஒதுக்கீடு ஆக 69% இட ஒதுக்கீடு என்பதை உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, ஏன் 50% ஆகக் குறைக்கவில்லை"என்று கேள்வி கேட்டு உச்சநீதிமன்றம் தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது.

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடியினருக்கும் உள்ள 19% இட ஒதுக்கீட்டைக் குறைக்க முடியாது.

மொத்த இட ஒதுக்கீட்டை 50% ஆக்கியே தீர வேண்டும். நம் 'சமூகநீதி காத்த வீராங்கனை" வழக்கு 373/1993-இல தில்லியில் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு சாக்கில், ஒரு பிராமணப் பத்திரம் தந்தார்.

(அ) பிற்படுத்தப்பட்டோருக்கு இப்போது தருகிற 30% என்பதை 18.6% ஆகக் குறைத்து விட்டோம்.

(ஆ) மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இப்போது தருகிற 20% எனபதை 12.4% ஆகக் குறைத்து விட்டோம்.

தமிழக அரசு இதற்கான ஆணை ஒன்றை 5-11-93-இல் வெளியிட்டு விட்டது என்று உச்சநீதிமன்றத்திடம் கூறிவிட்ட செயலலிதா, சமூக நீதி காவலரா? சமூக அநீதி காவலரா?

செயலலிதாவின் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, இப்படி,ஓர் இரட்டைவேடம் கொண்டது என்பதை, செயலலிதா கூட்டிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே தலைவர்கள் எடுத்து வைத்திருக்க வேண்டும்

நாம் சென்னையில் 25-12-93-இல் கூட்டிய விகிதாசார இட ஒதுக்கீடு மாநாட்டில், மேலே சொன்ன விவரங்களை அம்பலப்படுத்துகிற வரையில், விளம்பரமாக, இந்த உண்மை மக்களுக்கும் தெரியவில்லை; கட்சித் தலைவர்கள் பலருக்கும் தெரியவில்லை.

நாங்கள் கூறுவதற்கு முன்னரே சில ஏடுகளில் இந்த விவரம் வெளிவந்தது உண்மை. ஆனால் செயலலிதாவை அம்பலப்படுத்தக் கூடாது என்று கருதி மிகவும் சிறியதாகவே இச் செய்தியை வெளியிட்டனர்.

Scanned with CamScanner

நாம் ஆதாரப் பூர்வமாக இந்தச் செய்தியை அறிவித்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. இன்னமும் இது மக்களைச் சென்று அடையவில்லை. செயலலிதாவின் இந்த இரட்டை வேடத்தைக் கலைப்பதற்குப் பதிலாக, "சமூக நீதி காத்த வீராங்கனை"! என்று 8-3-94 தொடங்கி "விடுதலை"யில் முழுப்பக்க விளம்பரம் வெளியிட்டு, தஞ்சை முழுவதிலும் ஆயிரக்கணக்கான சுவரொட்டிகளை ஒட்டி, பல்லாயிரக்கணக்கான கறுஞ்சட்டையினரையும், ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகளையும் பொது மக்களையும் கூட்டி வைத்து, 11-3-94-இல், தி.க.வினர் "சமூக நீதி காத்த வீராங்கனை" செயலலிதா என்று கூறி புகழ் சூட்டியதும் விழா எடுத்ததும்-இதை நியாயப்படுத்துகிற தன்மையில்.

"பெரியார் தத்துவங்களை — அணுகுமுறைகளைப் புரிந்து கொள்ளாதவர்கள் — ஆச்சாரியார் காலந்தொட்டு இன்றுவரை திராவிடர் கழக வரலாற்றை அய்யா பின்பற்றிய முறையை உணர்ந்தால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் நுனிப்புல் மேய்வதுதானே 'படித்த பாமரர்களின்' வழமையாக உள்ளது" (விடுதலை, 17,18 3-94) எனக் கூறி இவர்களின் ஈனப் போக்கைக் கண்டனம் செய்பவர்களைச் சாடிவிடுவதும் போதுமா?

**ஆட்சியாளர்களும் — பெரியாரும்:**

ஆட்சியாளர் பற்றிப் பெரியாரின் அணுகுமுறை என்ன? இது இவர்களை விமர்சிக்கிற 'படித்த பாமரர்களுக்கும்' புரிய வேண்டும்; கறுஞ்சட்டைத் தொண்டர்களுக்கும் இளந்தலைமுறை ... இளைஞர்களுக்கும் புரிய வேண்டும்.

ஆச்சாரியாருக்கு முன்னர் ஓமந்தூர் பி.இராமசாமி ரெட்டியார், முதன்முதலாக, "இந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 14% தனி இட ஒதுக்கீடு' அளித்தார். அதற்காகப் பெரியார் அவரைப் பாராட்டினார். ஆனால், அவருடைய ஆட்சியைக் காப்பதைக் கறுப்புச்சட்டைக்காரர்களின் வேலை என்று ஆக்கிடவில்லை.

முதலாவது பொதுத் தேர்தல் முடிந்தவுடன் 1952-இல் ஆச்சாரியார் முதலமைச்சர் ஆனார். அவர் பதவிக்கு வந்த பிறகு, ரேஷன் முறையை இரத்துச் செய்தார். ஓர் ஆளுக்கு 8 அவுன்ஸ் அரிசி இன்றைய பங்கீடு அளவு. இதை இரத்துச் செய்த ஆச்சாரியாரைப் பெரியார் பாராட்டினார். அவர் ஆட்சியை ஆதரிக்கவில்லை.

ஆனால் தமிழர்களின் கல்விக்கண்ணைக் குத்த முனைந்த அதே ஆச்சாரியாரை எதிர்த்துப் போராடி விரட்டினார், பெரியார்.

ஆச்சாரியாரை விரட்டியதில் காங்கிரசாருக்கும் பங்கு உண்டு. எனவே காமராசர் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக வரவேண்டும் எனக் காங்கிரசார் முயன்றனர். ஆனால் காமராசர் அந்தத் தேர்தலுக்கு நிற்கும் முன்னரே, பெரியாரை நாடி வந்தார்; பெரியாரின் ஆதரவைக் கோரினார்.

அவ்வமயம் பெரியார், காமராசருக்கு விதித்த நிபந்தனைகள் இரண்டு.

குலக்கல்வித் திட்டம் என்கிற அரை' நேரக் கல்வித் திட்டத்தை இரத்துச் செய்து, ஆச்சாரியாரால் மூடப்பட்ட 6000 பள்ளிகளையும் திறந்து ஆரம்பக் கல்வியைப் பரப்பவேண்டும் என்பது ஒன்று.

நீதிக்கட்சிக் காலந்தொட்டு நடப்பிலிருக்கிற வகுப்புவாரி உரிமையை நன்கு அமல் செய்ய வேண்டும் என்பது இன்னொன்று.

இந்த இரண்டு நிபந்தனைகளையும் ஒத்துக் கொண்டு சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தேர்தலில் தேர்வு பெற்று, 13-4-54-இல் பதவி ஏற்றார் காமராசர். அன்று பெரம்பலூரில் வே.ஆனைமுதது தலைமையில் குலக்கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாடு. தாம் முன்வைத்த நிபந்தனைகளைக் காமராசர் நிறைவேற்றினால் தொடர்ந்து அவரே முதலமைச்சராக இருக்க வேண்டும் என அன்றைய மாநாட்டில் பெரியார் பேசினார்.

காமராசர் பதவி வகித்த காலம் முழுவதிலும், பெரியாரிடம் முன்கூட்டியே ஒருவரை அனுப்பி, அவருடைய எண்ணத்தை அறியாமல் எந்த திட்டத்தையும் அவர் அறிவித்ததே இல்லை.

அந்தக் காமராசர் காலத்தில்தான் பெரியார் அரசியல் சட்ட எரிப்புக் கிளர்ச்சியை நடத்தினார். அதே காமராசர் காலத்திலதான் 3,000 கறுஞ்சட்டையினர் 30 நாள் முதல் 3 ஆண்டுகள் வரை சிறைவைக்கப்பட்டனர்

ஓர் ஆட்சியைப் பெரியார் முழுமையாக ஆதரித்தார் என்பதன் தன்மை இவ்வளவுதான்.

பக்தவத்சலம் காலத்தில் "பக்தவத்சலம் ஆட்சி ஒழிப்பு நாளை"யே பெரியார் நடத்திக் காட்டினார்

அண்ணாதுரை பதவி ஏற்கும் முன்னரே பெரியாரைத் திருச்சியில் சந்தித்தார்.

1954-இல் காமராசரும் பெரியாரும் பேசிக் கொண்ட அளவில் கூட, அண்ணாதுரையும் பெரியாரும் அன்று பேசிக்கொள்ளவில்லை.

பெரியாரை விட்டு விடைபெறும் போது.

"அய்யா, நீங்க..." என்று இரண்டு சொற்களோடு நிறுத்திக் கொண்டார் அண்ணாதுரை.

"என்னைத்தான் உங்களுக்கு நல்லாத் தெரியுமே!" என்று நான்கு வார்த்தைகளோடு நிறுத்திக் கொண்டார் பெரியார்.

பெரியாரைப் புரிந்து — பெரியாரை மதித்து வந்த அண்ணாதுரை, எதிர்பாராத வகையில் முதிராச் சாவு எய்தினார். (தொடரும்)

Scanned with CamScanner

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் சிந்தனையும் செயலும் தொடரட்டும்!

— இ.அதியமான். துணைச்செயலர், உ.த.மு.க.

**'தமிழ்நிலம்'** இதழ் 173-இல் ஒரு தலையாய முற்போக்குச் சிந்தனை என்ற தலைப்பில் கரடிப்பட்டி திரு.**கண்ணன்** அவர்கள் எழுதிய கட்டுரையைப் படித்துவிட்டு மகிழ்ச்சி அடைந்தேன். இப்போதாவது சிந்திக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். அவர் அக் கட்டுரையில் "இன்றைய தேக்க நிலையைப் போக்கி அடுத்தக் கட்டத்திற்கு இயக்கத்தை கொண்டு செல்வது எவ்வாறு என்பதைப் பற்றியே நாம் சிந்திக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

நல்ல அறிவுரை. உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தில் முதல்வராக இருந்த **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் 2-2-92-இல் அப்பொறுப்பிலிருந்து அகன்று நிறுவனரானார். இயக்கம் ஒரு பொதுச் செயலாளருடைய ஆளுமைக்கு மாற்றப்பட்டது. ஓரளவிற்கு இயக்க விரிவுப் பணிகளும் நடந்தன. பின் தேக்க நிலையை இயக்கம் அடைந்தது. பொறுப்பாளர்கள் யாவரும் அதைப் பற்றிக் கவலைப்பட்டதாக ஓர் அடிப்படையும் கிடைக்கவில்லை. அதைபற்றிப் பொறுப்பாளரிடம் நேரிலும் மடல்கள் மூலமும் தொடர்பு கொண்டேன். அதன் பின் இப்போது சிந்திக்க வேண்டிய நிலைக்கு நாம் வருகிறோம்.

திரு.கண்ணன் அவர்களுடைய இக்கட்டுரைக் கருத்துகளைக் காணும் போது, இயக்கக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்வது எப்படி என்று ஆய்ந்திருக்கிறார் எனத் தெரிய வருகிறது. இது தேவையானதுதான். இவ்வியக்கத்தின் நிறுவனரும், இயக்குநரும் **பாவலரேறு பெருஞ்சித்திரனாரே**, எனவே அவரைச் சற்று திறனாய்வு செய்கிறார்; செய்ய வேண்டியதுதான். ஏனென்றால் பெருஞ்சித்திரனாரைப் பற்றி முதலில் பொறுப்பாளர்கள் தெரிந்து கொண்டால்தான் மக்களிடம் அவரைப் பற்றியும் அவருடைய கொள்கைகளைப் பற்றியும் கூறமுடியும். அதனால் திரு.கண்ணன் அவர்கள் அவரைப் பற்றிய முழுமையான ஆய்வை மேற்கொள்ளாவிட்டாலும் மக்களுக்கு முதல் தேவையான கருத்துகளைப் பாவலரேறு அவர்களைக் காட்டிக் கூற வேண்டுமே! அதற்கான கருத்துகளைக் கட்டுரையில் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

கழகத்தின் ஏழு அடிப்படைக் கொள்கைகளும் தமிழினம் விடுதலைப்பெற மக்களிடம் போய்ச் சேர்ந்தால் மக்களிடம் ஒரு புரட்சிக்கு உணர்ச்சி தோன்றும் என்று கட்டுரையாளர் காட்டி இருப்பது நல்லவழி அதற்காக ஏழு கொள்கைகளை இயக்குவதற்கு ஏழு துணைச் செயலாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் தங்களுக்குக் கொடுத்த பணிகளைச் செப்பமாக செய்தால், அதன் பயன் எவ்வளவு கிட்டியுள்ளது எனத் தெரியும். அப்படிக் கொண்டு செல்லும் போது ஏற்படும் சிக்கலகள் பற்றிச் சிந்திக்கக் கட்டுரையாளர், அந்தக் கொள்கைகளை வகுத்த பாவலரேறு அவர்களைத் திறனாய்வு செய்கிறார். அதைக் குற்றமென யாரும் கூறமுடியாது. ஏனென்றால் கழகம் வளரவேண்டும், அதற்கு மக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும், எனவே பாவலரேறு அவர்களைப் பற்றி நாம் அறிந்து கொள்வது இன்றியமையாதது.

முதலாவது, 'மொழிநிலையில் தூய தமிழ்க் கொள்கையை, அரசியலில் மற்றக் கொள்கைகளுக்கு அழுத்தம் கொடுப்போர் ஏற்றுக் கொள்ளவில்லை.' என அவர் கூறுகிறார். இங்கேதான் நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அரசியலார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது எனக்கு முகாமையாகப் படவில்லை. ஏனென்றால் பாவலரேறு அவர்களுக்கு முன் நிற்பவர்கள் மக்களேயன்றி அரசியல் நடத்துபவர்கள் அல்லர் என்பதை நாம் முதலில் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். எடுத்துக் காட்டாக ஒன்றைக் குறிப்பிடுகிறேன். தி.மு.க. அரசியல் நடத்த வந்தபோது நாட்டில் வழங்கி வந்த அல்லது பிற மொழியினரால் புகுத்தப்பட்ட அயல் சொற்களைத் தூய தமிழாக்கினார்கள். அபேக்ஷகர் என்ற சொல்லை வேட்பாளர் என்றும், மாகாணம் என்ற சொல்லை மாநிலம் எனவும், சென்னை இராசதானி என்பதைத் தமிழ்நாடு என்றும், அக்கிரசானர் என்பதை அவைத் தலைவர் என்றும், சனாதிபதி என்ற சொல்லைக் குடியரசுத் தலைவர் எனவும், மந்திரி என்ற சொல்லை அமைச்சர் என்றும், ரேடியோ என்ற சொல்லை வானொலி என்றும் மாற்றினார்களே, ஏற்றுக் கொண்டார்களே, வழக்கத்தில் பேசி வருகிறார்களே. எனவே நமக்கு மக்கள்தான் முகாமையே தவிர அரசியற் கட்சிக்காரர்கள் முகாமையன்று. அரசியலார் விரும்பும் மொழியை நாட்டில் புகுத்த எண்ணிச் செயலபட்டதால்தான், தமிழ்மொழி கலப்பிலிருந்து மாறாமல் இருக்கிறது. அதை மாற்ற தூயதமிழைப் பரப்பிவரும பாவலரேறு அவர்களை அரசியலார் ஏற்றுக் கொள்ளாவிட்டால் கவலையில்லை. நமக்கு மக்கள்தான் முகாமை. அவர்கள் பேசும் மொழி

தூய்மையடைய வேண்டும் என்பதே நோக்கம். அரசு மாறக் கூடியது; மொழி மாறக் கூடாதது. ஏனென்றால் மொழி உணர்வே இன உணர்வை உண்டாக்கும். இன உணர்வே நாட்டுப் பற்றைத் தோற்றுவிக்கும். எனவே தூய தமிழ்க் கொள்கையை நாம் மக்களிடம் கொண்டு செல்வது மிகவும் இன்றியமையாதது.

இரண்டாவதாக, சாதியொழிப்புக் கொள்கையைப் பற்றிக் கூறுகிறார். உ.த.மு.க.வில் சாதியொழிப்புக் கொள்கையும் ஒன்றாக இருப்பதால் பலர் அவரோடு இணங்கிப் போக முடியவில்லை என்றும், ஒடுக்கப்பட்ட சாதியினரும் அவருக்கு ஆதரவு காட்டவில்லை என்றும் கண்ணன் குறிப்பிடப்பட்டுள்ளது வியப்பைத் தருகிறது இந்தியாவில் இருக்கிற அத்தனை அரசியற் கட்சிகளும் சாதி கூடாது என்றே கூறுகின்றது. மிக உயர்ந்த சாதி என்று கூறிக்கொள்ளும் பார்ப்பனர் சாதியில் பிறந்த பாரதியார் கூட 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடி, சிறு பிள்ளைகள் முதல் சாதி உணர்வின்றி வளர வேண்டும் எனக் காட்டுகிறார். பாரதியாரில் சாதி ஒழிப்பு கரவானது. அது வேறு செய்தி. அதையெல்லாம் ஆய்ந்து பார்த்தாகி விட்டது ஆனால், சாதிஒழிப்பைப் பாவலரேறு கூறுவதால் ஒடுக்கபபட்டவர்களும் சாதி ஒழிப்புக்கு ஆதரவு காட்டவில்லை என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒடுக்கப்பட்டவர்கள் தாம் சாதி ஒழிப்பில் முழுப்பங்காற்றுவார்கள். அதற்காக எந்தக் கொடையையும் கொடுக்க அணியமாக இருப்பார்கள். ஏனென்றால் சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்டு இன்னும் பல துன்பங்களை நுகர்ந்து கொண்டிருப்பவர்கள் அவர்களே! அம்பேத்கர் இயக்கங்கள் தோன்றக்காரணியமே சாதி ஒழிபபில் அவர் காட்டிப விரைவு(தீவிரம்) என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நரசிம்மராவ் என்ற பெயரில் வரும் ராவ் என்ற சாதிச் சொல்லை அகற்றாமல் சாதி ஒழிய வேண்டும் என்று நரசிம்மவராவ் கூறுகிறாரே!

சாதியைத் தம்முடைய வாழ்வில், தம்முடைய பிள்ளைகளுக்குச் சாதி ஒழிப்புத் திருமணம்(கலப்புத் திருமணம்) செய்வித்துச் சாதியை நொறுக்கித் தூள் தூளாக்கிவிட்டுத்தான் மக்களிடம்'சாதி ஒழிய வேண்டும்' என்ற கொள்கையைக் கூறுகிறார், பாவலரேறு. அவ்வாறு ஏன் கூறக் கூடாது? அதனால் அவரோடு பலர் இணங்கிப் போக முடியவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சாதி ஒழியக் கூடாது என்று எண்ணுகிறவர்கள் வேண்டுமானால் பாவலரேறு அவர்களோடு இணங்கிப்போக மறுப்பர். உ.த.மு.க.வில் எல்லாச் சாதியினரும் இருக்கின்றனர், அவர்களில் யாரும் சாதி ஒழிப்புக் கொள்கையால் இயக்கம் தேக்கம் அடையும் என்று இந்நாள்வரை கூறவில்லை; கூறவும் மாட்டார்கள்.

இன்னொன்றையும் நான் கட்டாயம் நினைவு படுத்த வேண்டும். ஒடுக்கப்பட்ட சாதியினர் முன்னேற அரசு வேலை மற்றும் கல்வியில் இட ஒதுக்கீடு தேவைதான். **ஆனால் சாதியைக் குறிப்பிடாமல் ஒவ்வொரு சாதிக்கும், எண்ணைக் குறிப்பிட்டு இடஒதுக்கீட்டை வழங்க வேண்டும்'** என்று, சாதியை மறப்பதற்கு வேறுவழியை இடஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப் பாவலரேறு அவர்கள் அறிவுறுத்துகிறார்கள். இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்களா? கட்டாயம் சாதி ஒழிய வேண்டும் என்று எண்ணும் மக்களிடம் இதைக் கூறினோமா? இதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று ஒடுக்கப்பட்டோர் கூறினார்களா? இல்லையே. கட்டுரையாளருக்கு இப்படிப்பட்ட கருத்து எந்த அடிப்படையில் தோன்றியது எனத் தெரியவில்லை. ஒதுக்கப்பட்டவர்களுக்கு ஓர் அச்சம் வருவது இயல்பே. சாதி ஒழிந்து விட்டால், இட ஒதுக்கீடும் போய்விட்டால் வாழ்வது எப்படி என்ற அச்சம். அதற்கு பாவலரேறு அவர்களின் மாற்றுத் திட்டத்தை அறிவித்துவிட்டால் அச்சம் தீரும். சாதியை ஒழிக்க அவர்களும் துணைநிற்பார்கள்.

அடுத்து மதம்—இறைப்பற்றுப் பற்றிய பாவலரேறு அவர்களின் நோக்கத்தைப் பற்றியும் கட்டுரை பேசுகிறது. மதக் கொள்கைக்கும் அவர் (பாவலரேறு) காட்டுகின்ற ஓர்இறை பேராற்றல் கொள்கைக்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு என்று கூறிவிட்டு இறை நம்பிக்கையற்ற பெரியார் மற்றும் பொதுவுடைமைக் கொள்கையாளர்கள் அவருக்குத் துணை நிற்கவில்லை என்று கூறி தந்தை பெரியாரின் இறை மறுப்புக் கொள்கையும், மார்க்சியத்தின் வகுப்பு போராட்டமும் ஏன் இங்கு இன்னும் முழுமையாக வெற்றிபெறவில்லை என்ற வினாவைத் தொடுக்கிறார் கட்டுரையாளர், பெரியார், மார்க்சு கொள்கைகளே வெற்றிபெறவில்லையே பாவலரேறு அவர்களின் இறைக் கொள்கை வெற்றி பெறுமா எனக் கவலைப்படுகிறார். கவலை வேண்டாம்.

இந்தியா விடுதலை பெறும்போது நாட்டை வெள்ளையர்கள், மதத்தில் மூட நம்பிக்கைகளைப் புகுத்தி அதனால் வாழ்ந்து கொண்டிருக்கும் பார்ப்பனர் பெரும் முதலாளிகளிடம் ஒப்படைத்து விட்டார்கள். மார்க்சியத்தைப் பின்பற்றுவதாய்க் கூறிப் பரப்ப வந்தவர்கள்.ஏமாற்றுக் கதைகளைக் கற்பித்த பார்ப்பனர்கள். எனவே மார்க்சியத்தைப் பின்பற்றியவர்களும் அக் கொள்கையை விளத்தமாக மக்களிடம் கொண்டு செல்லவில்லை என்று நான் கருதுதுகிறேன். மேலும் மார்க்சியத்தில் பார்ப்பனர்களுடைய தலையீடுகள் இருந்தமையால் அது வெற்றி பெற முடியவில்லை என்பது என் கருத்து.

மார்க்சை விட மிகச் சிறப்பாக திருவள்ளுவர் பொதுவுடைமை பற்றிப் பேசுகிறார். அதனாலேயே

Scanned with CamScanner

பாவலரேறு அவர்கள் தமிழ்த்தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்,என்று உ.த.மு.கவின் உயர்ந்த கொள்கைகளில் ஒன்றாகக் காட்டுகிறார். தமிழர்களுக்குத் திருவள்ளுவரைவிட தமிழக மக்களுக்கு ஏற்ற பொதுவுடைமையை மார்க்சு தந்துவிட முடியாது. எனவே மார்க்சு சிந்தனையைத் தேவைப்பட்டால் ஆய்ந்து கொள்ளலாம். அனைவருமே மார்க்சு மார்க்சு என்றே பேசுகிறார்கள். திருவள்ளுவரை அணு அணுவாய் ஆய்ந்த பாவலரேறு அவர்களின் திருக்குறள் மெய்ப்பொருள் உரை வருமட்டும் பேசட்டும்.

தந்தை பெரியார் மக்களுடைய வாழ்வியலை ஆய்ந்து, அவர்களை ஆட்டிப் படைப்பது மதமும் அதன் தலைவர்களாகிய கடவுள்களும்தாம் என்பதை நன்கு உணர்ந்தார்கள். புராணங்களைத் தந்தை பெரியார் அவர்கள் சிறு அகவை முதல் கேட்டறிந்தவர்கள். தந்தை பெரியாரின் தந்தை, பெரியாரைப் புராணங்களை தம்முடைய வீட்டிலேயே பாடக் கேட்க வைத்தவர். அவர் ஒரு வேத நெறியாளர் (வைதீகர்). தந்தை பெரியார் கடவுள்களின் ஒழுக்கங்களை யெல்லாம் கேட்டுவிட்டு மக்களுக்கு இப்படிப்பட்ட ஒழுக்கங்கெட்டவர்களா கடவுள்கள் என்று 'கடவுளே இல்லை' என்று சொன்னார். அப்போது இப்படி ஒருவர் துணிந்து எதிர் மறையாகக் கூறும் ஆற்றல் யாருக்குமில்லை. எனவே தொடக்கத்தில் தந்தை பெரியாருடைய இந்தக் கொள்கைக்கு கடும் எதிர்ப்பு இருந்தது. பின் வர வர அதன் உண்மைகளைக் கண்ட பின்பு பலர் அவருக்கு ஊக்கம் காட்டினர். தந்தை பெரியாருடைய பேச்சைக் கேட்கக் கூடிய கூட்டம் அப்போது வேறு யாருக்குமில்லை. சவகர்லால் போன்ற ஆட்சியாருக்குக் கூடியது உண்டு ஆனால் அக் கூட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு வேடிக்கை பார்ப்பதற்காகவும், இன்னொரு பங்கு அவர் எப்படி இருக்கிறார் என்று பார்ப்பதற்காகவும் கூடிய கூட்டங்கள். அவர் பேச்சைக் கேட்கப் போன கூட்டம் கொஞ்சமே; ஏனென்றால் அவர் பேசும் ஆங்கிலம் பலருக்குத் தெரியாது. ஆனால் தந்தை பெரியாருக்குக் கூடிய கூட்டம் முழுவதும் அவர் கூறும் கருத்துகளைக் கேட்பதற்காக, அறிவு பெறுவதற்கான கூட்டந்தான். அவர் பேச்சைக் கேட்டவர்கள், எழுதியதைப் படித்தவர்கள் பெரியாரியல் கருத்துகளிலிருந்து விலகவில்லை. அது தொடர்ந்திருந்தால் தமிழகம் இன்று அறிவியலில் சிறந்து விளங்கியிருக்கும். இன்றைய நிலையைப் பார்த்துக் கொண்டு வெற்றி பெறவில்லை எனக் கூறுவது சரியில்லை.

தந்தை பெரியார் மதம் ஒழிய கடவுள் ஒழியக் கூறினார், என்றாலும் அவை ஒழியவில்லை என்று கருதி வெற்றிபெறவில்லை என்று கொள்வது தவறு. ஏனென்றால் சாக்ரடீசு, ஏங்கல்சு, மார்ட்டின் லூதர் போன்றோர் தோன்றிப் பலசீர் திருத்தங்களைக் கூறி இருந்தாலும் உலகத்தில் மதமும் மதத்தைக் காப்பதாகக் கூறும் மதத்தவர்களும் ஒழியவில்லை. இதற்கான காரணியம் உலக மக்களிடம் பதிந்துள்ள மாயை,மூட நம்பிக்கை அது தொடபான கொள்கைகள் வாழையடி வாழையாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. இன்னும் பல காரணியங்களும் உண்டு. முழுக்க முழுக்கக் கடவுள் மறுப்புக் கொள்கையிலேயே வளர்ந்து அக்கொள்கையைக் கண்டுபிடித்த தந்தை பெரியாருடனே வாழ்ந்து வந்த அண்ணாத்துரையும் அவரோடு சேர்ந்தவர்களும் அரசியலைக் கைப்பற்ற அவரைவிட்டு வெளியில் வருகிறார்கள். கடவுள் இல்லை என்று சொன்னால் அது எதிர் வினையைத் தந்துவிடும். மக்களில் பெரும்பாலோர் கடவுள் கடவுள் என்று திரிகிறார்கள், அவர்களுடைய ஒப்போலைகள் வேண்டும், அரசியலைப் பிடிக்க வேண்டுமானால் மக்களோடு சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற சூழலில்,அரசியலுக்காகக் கொஞ்சம் கீழிறங்கி, **'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'** என்ற திருமூலரின் கருத்தைக் கூறினார். அந்தத் தேவன் யார்? அதுதான் அறமுதல்வன் என்று பாவலரேறு கூறுகிறார். இனிக் கட்டுரையை ஆய்வோம். ''என்றென்றும் அழிக்க முடியாத ஆற்றலே இறைமையாக இயங்குவதாகவும், இன்றைய மதங்களுக்கும் இறைமைக்கும் தொடர்பில்லை என்றும் கூறுகிறார்'' ஆம் அவருடைய கூற்று உண்மைதான்.

பாவலரேறு அவர்கள் கூறும் அறமுதல்வன் என்ற இறைவனை யாராலும் அழிக்க முடியாது. அறத்தை அழித்தால் உலகமும் அழியுமே! இன்றைய மதத்திற்கும் அறமுதல்வனுக்கும் தொடர்பில்லை என்பது உண்மையே. அதனால் இன்று மதத்தின் பேரால் நடைபெறும் மூடக் கருத்துகளைக் கொண்ட செய்திகளைப் பாவலரேறு அவர்கள் எதிர்க்கிறார்கள். எனவே அறத்திற்கும் மதத்திற்கும் தொடர்பில்லை என்பது சரியே. மதத்தின் பேரால் நடக்கும் தீச்செயல்களை எதிர்த்தே ஆக வேண்டும். மக்களையும் எதிர்க்க அறிவுரை கூற வேண்டும்.

கட்டுரையில், 'பாவலரேறு மெய்யியலைப் புரிந்து கொண்டு, பெரியாரின இறை மறுப்புக் கொள்கையிலும், பொதுவுடைமைக் கொள்கையிலும் முழுமையாக நம்பிக்கை கொள்ளாமல்,சாதிய அடிப்படையில் மக்களைத் திரட்டுவதிலும் அதிகம் அழுத்தம் கொடுக்காமல், தமிழ்த் தேசிய இன ஓர்மையிலும், தமிழக விடுதலையிலும் அதிகம் நம்பிக்கை கொண்டு, சுருதனைத் தேடுதலிலும் பரப்பலிலுமே தம்முடைய நாற்பது ஆண்டுக்கால வாழ்க்கையைச் செலவிட்டிருக்கின்றார்' என்று திரு.கண்ணன் கவலைப்படுகிறார்.

தந்தை பெரியாரை இறை மறுப்புக்கொள்கையுடையவராகக் குறிப்பிடுகிறார். இறை என்பதன் பொருள் கடவுளைக் குறிப்பதாய்த் தெரியவில்லை.

பாவலரேறு அவர்கள் தமிழ்த்தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல், என்று உ.த.மு.கவின் உயர்ந்த கொள்கைகளில் ஒன்றாகக் காட்டுகிறார். தமிழர்களுக்குத் திருவள்ளுவரைவிட தமிழக மக்களுக்கு ஏற்ற பொதுவுடைமையை மார்க்சு தந்துவிட முடியாது. எனவே மார்க்சு சிந்தனையைத் தேவைப்பட்டால் ஆய்ந்து கொள்ளலாம். அலைவருமே மார்க்சு மார்க்சு என்றே பேசுகிறார்கள். திருவள்ளுவரை அணு அணுவாய் ஆய்ந்த பாவலரேறு அவர்களின் திருக்குறள் மெய்ப்பொருள் உரை வருமட்டும் பேசட்டும்.

தந்தை பெரியார் மக்களுடைய வாழ்வியலை ஆய்ந்து, அவர்களை ஆட்டிப் படைப்பது மதமும் அதன் தலைவர்களாகிய கடவுள்களும்தாம் என்பதை நன்கு உணர்ந்தார்கள். புராணங்களைத் தந்தை பெரியார் அவர்கள் சிறு அகவை முதல் கேட்டறிந்தவர்கள். தந்தை பெரியாரின் தந்தை, பெரியாரைப் புராணங்களை தம்முடைய வீட்டிலேயே பாடக் கேட்க வைத்தவர். அவர் ஒரு வேத நெறியாளர் (வைதீகர்). தந்தை பெரியார் கடவுள்களின் ஒழுக்கங்களை யெல்லாம் கேட்டுவிட்டு மக்களுக்கு இப்படிப்பட்ட ஒழுக்கங்கெட்டவர்களா கடவுள்கள் என்று 'கடவுளே இல்லை' என்று சொன்னார். அப்போது இப்படி ஒருவர் துணிந்து எதிர் மறையாகக் கூறும் ஆற்றல் யாருக்குமில்லை. எனவே தொடக்கத்தில் தந்தை பெரியாருடைய இந்தக் கொள்கைக்கு கடும் எதிர்ப்பு இருந்தது. பின் வர வர அதன் உண்மைகளைக் கண்ட பின்பு பலர் அவருக்கு ஊக்கம் காட்டினர். தந்தை பெரியாருடைய பேச்சைக் கேட்கக் கூடிய கூட்டம் அப்போது வேறு யாருக்குமில்லை. சவகர்லால் போன்ற ஆட்சியாருக்குக் கூடியது உண்டு ஆனால் அக் கூட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு வேடிக்கை பார்ப்பதற்காகவும், இன்னொரு பங்கு அவர் எப்படி இருக்கிறார் என்றுபார்ப்பதற்காகவும் கூடிய கூட்டங்கள். அவர் பேச்சைக் கேட்கப் போன கூட்டம் கொஞ்சமே; ஏனென்றால் அவர் பேசும் ஆங்கிலம் பலருக்குத் தெரியாது. ஆனால் தந்தை பெரியாருக்குக் கூடிய கூட்டம் முழுவதும் அவர் கூறும் கருத்துகளைக் கேட்பதற்காக, அறிவு பெறுவதற்கான கூட்டந்தான். அவர் பேச்சைக் கேட்டவர்கள். எழுதியதைப் படித்தவர்கள் பெரியாரியல் கருத்துகளிலிருந்து விலகவில்லை. அது தொடர்ந்திருந்தால் தமிழகம் இன்று அறிவியலில் சிறந்து விளங்கியிருக்கும். இன்றைய நிலையைப் பார்த்துக் கொண்டு வெற்றி பெறவில்லை எனக் கூறுவது சரியில்லை.

தந்தை பெரியார் மதம் ஒழிய கடவுள் ஒழியக் கூறினார், என்றாலும் அவை ஒழியவில்லை என்று கருதி வெற்றிபெறவில்லை என்று கொள்வது தவறு. ஏனென்றால் சாக்ரடீசு, ஏங்கல்சு, மார்ட்டின் லூதர் போன்றோர் தோன்றிப் பலசீர்திருத்தங்களைக் கூறி இருந்தாலும் உலகத்தில் மதமும் மதத்தைக் காப்பதாகக் கூறும் மதத்தவர்களும் ஒழியவில்லை. இதற்கான காரணம் உலக மக்களிடம் பதிந்துள்ள மடமை, மூட நம்பிக்கை அது தொடர்பான கொள்கைகள் வழிவழியாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. இன்னும் பல காரணியங்களும் உண்டு முழுக்க முழுக்கக் கடவுள் மறுப்புக் கொள்கையிலேயே வளர்ந்து அக்கொள்கையைக் கடைப்பிடித்த தந்தை பெரியாருடனே வாழ்ந்து வந்த அண்ணாதுரையும் அவரோடு சேர்ந்தவர்களும் அரசியலைக் கைப்பற்ற அவரைவிட்டு வெளியில வருகிறார்கள். கடவுள் இல்லை என்று சொன்னால் அது எதிர் வினையைத் தந்துவிடும். மக்களில் பெரும்பாலோர் கடவுள் கடவுள் என்று திரிகிறார்கள், அவர்களுடைய ஒப்போலைகள் வேண்டும், அரசியலைப் பிடிக்க வேண்டுமானால் மக்களோடு சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற சூழலில், அரசியலுக்காகக் கொஞ்சம் கீழிறங்கி, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் கருத்தைக் கூறினார். அந்தத் தேவன் யார்? அதுதான் அறமுதல்வன் என்று பாவலரேறு கூறுகிறார். இனிக் கட்டுரையை ஆய்வோம். "என்றென்றும் அழிக்க முடியாத ஆற்றலே இறைமையாக இயங்குவதாகவும், இன்றைய மதங்களுக்கும் இறைமைக்கும் தொடர்பில்லை என்றும் கூறுகிறார்" ஆம் அவருடைய கூற்று உண்மைதான்.

பாவலரேறு அவர்கள் கூறும் அறமுதல்வன் என்ற இறைவனை யாராலும் அழிக்க முடியாது. அறத்தை அழித்தால் உலகமும் அழியுமே! இன்றைய மதத்திற்கும் அறமுதல்வனுக்கும் தொடர்பில்லை என்பது உண்மையே அதனால் இன்று மதத்தின் பேரால் நடைபெறும் மூடக் கருத்துகளைக் கொண்ட செய்திகளைப் பாவலரேறு அவர்கள் எதிர்க்கிறார்கள். எனவே அறத்திற்கும் மதத்திற்கும் தொடர்பில்லை என்பது சரியே. மதத்தின் பேரால் நடக்கும் தீச்செயல்களை எதிர்த்தே ஆக வேண்டும். மக்களையும் எதிர்க்க அறிவுரை கூற வேண்டும்.

கட்டுரையில், 'பாவலரேறு மெய்யியலைப் புரிந்து கொண்டு, பெரியாரின இறை மறுப்புக் கொள்கையிலும், பொதுவுடைமைக் கொள்கையிலும் முழுமையாக நம்பிக்கை கொள்ளாமல், சாதிய அடிப்படையில் மக்களைத் திரட்டுவதிலும் அதிகம் அழுத்தம் கொடுக்காமல், தமிழ்த் தேசிய இன ஓர்மையிலும், தமிழக விடுதலையிலும் அதிகம் நம்பிக்கை கொண்டு, கருத்தைத் தேடுதலிலும் பரப்பலிலுமே தம்முடைய நாற்பது ஆண்டுக்கால வாழ்க்கையைச் செலவிட்டிருக்கின்றார்' என்று திரு.கண்ணான் கவலைப்படுகிறார்.

தந்தை பெரியாரை இறை மறுப்புக் கொள்கையுடையவராகக் குறிப்பிடுகிறார். இறை என்பதன் பொருள் கடவுளைக் குறிப்பதாய்த் தெரியவில்லை.

சிறைப்பட்டதும் உண்டு. எனவே, நாற்பது ஆண்டுகள் என்ன, இந்த இனம் எல்லா வகைகளிலும் விடுதலை பெற மட்டும் கருத்துகளைத் தேட வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே பாவலரேறு அவர்களின் பணிகள் வீண்போகாமல், அவருடைய கருத்துகள் மக்களிடம் செல்ல எல்லா முயற்சிகளையும் உ.த.மு.க. எடுக்க வேண்டும். வீட்டின் ததவுகளையும் பலகணிகளையும் இறுக மூடிக் கொண்டு கை விளக்கை இயக்கிக் கொண்டு, வெளிச்சம் வெளியே போகவில்லையே என்று கூறிக் கை விளக்கை ஆக்கித் தந்தவரைக் குறை கூறிக் கொண்டு இருத்தல் நல்லதோ? அருமை அன்புத் தமிழ் நெஞ்சங்களே! இந்தத் தமிழகத்தின் மீது அன்புவைத்து, இந்த இனத்தின் உயர்விற்காக, விடுதலைக்காக உங்களுடைய பங்களிப்பை உ.த.மு.க.விற்கு வழங்குங்கள். பல கரணியங்களால் விலகி நிற்கும் அன்பர்கள் வந்து, உங்கள் அறிவுரைகள் இந்த இன உயர்விற்குப் பயன்படும் வகையில், இன்னும் சிந்தித்து இந்தத் தமிழினம் எல்லாத்துறைகளிலும் விழிப்படைந்து விடுதலை பெறப் பாடுபடுவோமாக! பொறுப்புகளை ஏற்போமாக! உங்களுடைய திறமைகள் வீண்போக வேண்டாம்! O

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அம்மாவின் முகம் மட்டும் கொண்ட சுவரொட்டிகள், பொது மக்களைத் தமிழ் மாநாட்டுக்கு அழைப்பது போலும் வாசகங்களையும் அவரை வாழ்த்தி அளவுக்கு மீறிப் புகழ்ந்துரைக்கும் சொல் தொடர்களையும் இணைத்து அச்சடிக்கப் பெற்று, பலவேறுன வண்ண வண்ண நிறங்களையும் ஒளிவிளக்குகளையும் கண் சிமிட்டி மின்னுகின்ற சரிகை வேலைப் பாடுகளையும் கொண்டு மிளிர்ந்தன. இந்நிலையில் மக்களின் வரிப்பணம் ஊதாரித்தனமாக இலக்கம் இலக்கமாகச் செலவிடப் பெற்றிருக்க வேண்டும். இவற்றுடன் திரைப்படக் காட்சிச் சுவடிப்புகள் நூற்றுக்கணக்கான வரவேற்பு வளைவுகளும், தோரண வாயில்கள் முதலியன தஞ்சையிலுள்ள அத்தனைச் சாலைகளிலும் சந்து சதுக்கங்களிலும் போக்குவரத்துகளுக்கு இடையூறு செய்யும்படி குறுக்கும் நெடுக்கும், உயர உயரமாக அமைக்கப் பட்டிருந்தன.

இவற்றுளெல்லாம் எழுதி அல்லது அச்சிடப் பெற்றிருந்த செயலலிதாவைப் பற்றிய புகழ்ச்சியுரைகள், அவரைக் கொண்டு பணம் சுரண்டிப் பிழைக்கும் அமைச்சர்கள், அடிவருடிகள், அடிமைகள், காலில் விழுந்து விழுந்து வணங்கி வணங்கி எழும் கயவர்கள், பல்லிளித்துப் பாடிப் பிழைக்கும் பாட்டுக்காரர்கள் முதலியவர்களின் தாறுமாறுன தன்மானமற்ற கற்பனைகளில் தோன்றிய வரி வாசகங்கள், உண்மையான அறிவும் மானமும் உள்ளவர்கள், நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகும்படி, புளுகுரைகளாகவும், பொய்யுரைகளாகவும் இருந்ததற்குத் தமிழினம் தலைகுனிய வேண்டியிருந்தது. அடடா! அப்புகழ்ச்சியுரைகளின் கங்குகரை மீறிய இழிவுணர்வுகளில் அவற்றை எழுதியவர்களின் ஆசை வெறியுணர்வுகளும், அவ்வாறு செய்து அவர்கள் கொள்ளையடித்த சுரண்டல் தொகைகளின் அளவுகளும் தெளிவாகப் புலப்பட்டன. (தொடரும்)

TN/MS(C)657

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமனிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு-94**

உண்மை சில நேரங்களில் கசப்பாக இருக்கும். அதே போல் பொய் சில நேரங்களில் இனிப்பாக இருக்கும். ஆனல், இவ்விரண்டு நேரங்களிலும் மனம் மயக்கமாகவும், அறிவு கலக்கமாகவும் இருக்கும்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்: 174.)

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5, அருணுசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
தனி இதழ் விலை உரூ: 1-50
ஆண்டுக் கட்டணம் உரூ: 36.00
அரையாண்டுக் கட்டணம் உரூ: 18-00

நூல் அஞ்சல்
பெறுநர்:
திரு / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனுர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணுசலத் தெரு, சென்னை-5